அங்கே சிங்காரத் தோட்டம் பகுதி உள்ளது; புல் தோட்டம் பகுதியும் இருக்கிறது. எனவே இது முல்லைத் தோட்டமாகத் தான் இருந்திருக்க வேண்டும். வழக்கிலே மொட்டைத் தோட்ட மாகி விட்டது. எனவே, மீண்டும் முல்லைத் தோட்டம் என பெயரிடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முளைத்தால் ஆக்கப்படும்.(சிரிப்பு)

9.40 மணி

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சென்னையாக இருக்கிற காரணத்தாலே கேட்கிறேன். தன்மானச் சிங்கம் என்று பெயர் பெற்ற பட்டிவீரன்பட்டி டபிள்யூ.பி.எஸ். சௌந்திரபாண்டியனார் தெரு என்று தான் பாண்டி பஜார் என்று அழைக்கப்படுகிற தெரு முன்பு இருந்ததாகவும், காலத்தால் மருவி அப்படி ஆகிவிட்டது என்றும் சொல்லுகிறார்கள். அது உண்மையா? உண்மையாயின் மீண்டும் அது சௌந்திர பாண்டியனார் தெரு என்று ஆக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் நாயர் சாலை. பனகல் பூங்கா என்று எல்லாம் இருக்கிற காரணத்தால், அதுவும் ஒரு காலத்திலே சௌந்திரபாண்டியன் அவர்கள் பெயரால் பாண்டியன் கடைத்தெரு என்று இருந்திருக்கலாம். ஒரு வேளை அப்படியில் லாமல் பாண்டிபஜார் என்று இருந்தாலும்கூட, அதைப் பாண்டியன் கடைத்தெரு என்று ஆக்குவதற்கு இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

சென்னை ஜார்ஜ் டவுன் கூட்டுறவு வங்கி

* 7972 திரு. உ. ரா. வரதராசன்;
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை ஜார்ஜ் டவுன் கூட்டுறவு வங்கியில் தவணை தவறிய கடன்கள் ரூபாய் ஒரு கோடிக்கு மேல் உயர்ந்து அந்த வங்கி நலிவுற்ற நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) இந்த நிலைக்குக் காரணமாக இருந்த அந்த வங்கியின் முன்னாள் நிர்வாகிகள் இழைத்த ஒழுங்கீனங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(இ) இந்த வங்கியின் நிலைமையைச் சீர்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

1990 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அறியும்.

(ஆ) முன்னாள் நிர்வாகிகள் ஏதேனும் கடும் தவறுகள் இழைத்திருந்தால் அவர்கள் மீது சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) வங்கியின் நிலைமையைச் சீர்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முன்னாள் நிர்வாகிகள் ஒழுங்கீனங்கள் இழைத்திருந்தால் என்று சந்தேகத்தோடு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். கடந்த காலத்தில் அந்த நிர்வாகிகள்மீது புகார்கள் எழுப்பப்பட்டு, அந்த இயக்குநர் குழுவை ஏன் கலைக்கக்கூடாது என்று அறிவிப்பு வழங்கப்பட்டு அன்றைக்கு இருந்த சூழ்நிலையில் அந்த நிர்வாகிகள் எடுத்ததகாத முயற்சி காரணமாக அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது. ஆகவே ஒழுங்கீனங்கள் பற்றி கூட்டுறவுத் துறைக்குத் தகவல் இருப்பதால், கண்டிப்பாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? டாக்டர் நடேசன் அவர்கள் துவக்கி வைத்து, இந்தியாவில் பிரதானமான வங்கியாக உள்ள அந்த வங்கியை நசிவு நிலைக்குக் கொண்டு வந்துள்ள நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விசாரணை முழுமை பெறாத காரணத்தால் அப்படிக் குறிப்பிட்டேனேயல்லாமல் வேறல்ல. விசாரணை முழுமை அடைந்தவுடன் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவார்களேயானால் அவர்கள்மீது உரிய கடும் நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வங்கியை மீண்டும் நல்ல நிலைக்குக் கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறதென்று அமைச்சரவர்கள் பதில் அளித்தார்கள். நான்கூட அமைச்சரவர்களிடத்தில், தனியாக ஒரு தனி அதிகாரியைப் பொறுப்பு ஏற்கச் செய்து, இதைச் சீர்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டேன். தனி அதிகாரி நியமிக்கப்பட்ட பிறகும், 2 மாத காலமாக அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நலிவு தொடர்ந்து நீடித்தால், அந்த வங்கி மூடப்படுகிற அபாயம் இருக்கிறது. எனவே உடனடியாக தனி அதிகாரி பொறுப்பு ஏற்று, அந்த வங்கியைச் சீர்படுத்த அமைச்சரவர்கள் உத்தரவிடுவார்களா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, துணைப் பதிவாளர் அந்தஸ்தில் ஏற்கனவே திரு. ஏழுமலை என்பவர் தனி அதிகாரியாக நியமிக்கப் பட்டிருக்கிறார். அவர் உடன் சென்று பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார். அதுதவிர மற்றைய நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்பட இருக் கின்றன. எனவே அந்த வங்கி நலிந்த வங்கியாகப் போக எந்தவித சாத்தியக்கூறும் இல்லை. நிச்சயமாக சிறப்பான வங்கி யாக அது உருவாகின்ற எல்லாவித சாத்தியக்கூறுகளும் இருக் கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல்

* 2090 திரு. அ. கணேசமூர்த்தி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா ;

மின்வாரியத்தில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பணி யாற்றி வரும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப் படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தில் பணியாற்றிவரும் ஒப்பந்தத் தொழி லாளர்களை நிரந்தரப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்சமயம் இல்லை.

இறவைப் பாசனத் திட்டம்

* 2098 திரு. சோ. வீரையன் :

மாண்புமிகு பொதுபப்ணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) திருத்துறைப்பூண்டி வட்டம் ஆலங்காட்டிற்கு தக பரிச்சான் ஆற்று இறவைப் பாசனத் திட்ட ஆய்வு முடிந்துவிட்டதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே,

(அ) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது.

(ஆ) ஆய்வு முடிந்தபின்பே, இப்பணியை மேற்கொள்ளுவது பற்றி முடிவு செய்ய இயலும்.